# வரலாற்றில் இருந்து நாங்கள் பாடங்கள் படிக்கவில்லை என்றால் வரலாறு எங்களை மன்னிக்காது




# அன்று அம்பாறை இன்று திருகோணமலை நாளை?

- திட்டமிட்ட குடியேற்றங்கள் பற்றிய ஓர் நோக்கு -

தமிழ்த் தேசியப் பற்றாளர்

**சின்னத்துரை வரதராஜன்**

(ஈழத்தின் பிரபல பொருளியல் பேராசான், முன்னாள் விரிவுரையாளர் பேராதனைப் பல்கலைக்கழகம்)

**வரதராஜன் சகுந்தலா**

அவர்களது **நினைவுமலர் - 2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் அழியாத நினைவுடன்..



தமிழ்த் தேசியப்பற்றாளர்
**சின்னத்துரை வரதராஜன்**
(ஈழத்தின் பிரபல பொருளியல் பேராசான்.
முன்னாள் விரிவுரையாளர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்)
(07.12.1951 - 18.08.2014)

**வரதராஜன் சகுந்தலா**
(பொருளியல் சிறப்புக்கலைமாணி
பேராதனைப் பல்கலைக்கழகம்)
(20.01.1951 - 20.05.2018)

மாணவ சமூகத்தை மட்டுமின்றி எமது இனத்தையும் தமிழ் தேசியத்தையும் நேசித்த ஈழத்தின் பிரபலமான பொருளியல் பேராசான் சின்னத்துரை வரதராஜன் மற்றும் அவர் மனைவி சகுந்தலா வரதராஜன் அவர்களின் நினைவாக இவ் நூல் வெளியிடப்படுகின்றது.

எனது அப்பா இந்த சமூகத்தில் கீர்த்தியை பெற்றிருப்பதற்கு காரணம் எனது அம்மா என்றால் அது மிகையல்ல. ஏன்என்றால் அப்பா எடுக்கின்ற ஒவ்வொரு முடிவிற்கும் பக்க பலமாக உறுதுணையாக சம்மதம் தெரிவிப்பராக அம்மா இருந்திருக்கின்றா.

அதனால் தான் அப்பா இந்தளவு தமிழ்த்தேசத்தின் மீது பற்றுதி கொண்டிருக்க முடிந்தது. அத்தோடு அவ் பாதையிலேயே தொடர்ந்தும் இறுதிய வரை அவரால் பயணிக்க முடிந்தது.

அம்மாக்கு அப்பதான் உலகம். ஆனால் அப்பாக்கு தன்னிடம் கல்வி கற்ற மாணவர்களும், தமிழ்த்தேசியத்தின் இருப்புமே உலகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் கூறுவார்கள் **"வரதம் எமது வரம்"** என்று அது உண்மை என்றால் **"அப்பாவுக்கு கிடைத்த வரம் அம்மா"** என்பது உண்மை.

தமிழ்த் தேசத்தின் மீதான திட்டமிட்ட குடியேற்றங்களின் விளைவாக எமது இனப்பரம்பல் மாற்றியமைக்கப்படுகின்றதே என்பது தான் அப்பாவின் கவலை. அது பற்றி எனக்குத் தெரிந்து 25 வருடத்திற்கு மேல் ஆய்வு செய்தார். எவ்வாறு சிங்கள குடியேற்றங்கள் திட்டமிட்டு இம் மண்ணில் செய்யப்பட்டது , எப்படி எமது இனப்பரம்பல் மாற்றியமைக் கப்பட்டது என்று ஆய்வு செய்ததை புள்ளிவிபரங்களுடனும், வரைபடங்க ளுடனும் புத்தகமாக்கினார். ஏறத்தாழ 500 பக்கங்களுக்கு மேற்பட்டதாக அப்புத்தகம் அமைந்திருந்தது.

அதனை வெளியிடுவதற்கு பல முயற்சிகள் எடுத்தார். ஆனால் எதுவும் வெற்றியளிக்கவில்லை. சிங்கள குடியேற்றம் வெறும் பேச்சும் பொருளாகவே இருக்கின்றது அதனை பற்றி யாரும் கண்டுகொள்ளவே இல்லை என்றும் மனம் வருந்தியிருக்கின்றார்.

இன்னொன்றையும் கூறினார் **"நான் கிழக்கு மாகாணம் எவ்வாறு பறிபோனது என்று எழுதியிருக்கின்றேன். நாளை எனது மரணத்தின் பின்னர் நீங்கள் வடக்கு மாகாணத்தை எவ்வாறு பறிகொடுத்தீர்கள் என்று புத்தகம் எழுதும் நிலை ஏற்படும்"** என்றார்.

அந்தவகையில் இன்றைய காலத்தின் தேவைகருதி என்னுடைய அம்மா அப்பா நினைவாக அப்பா எழுதிய தமிழர் வாழ்விடங்களும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் என்ற புத்தகத்தில் இருந்து ஒரு சிறு விடயத்தை வெளியீடு செய்வதில் எனது அப்பா மகிழ்ச்சி அடைவார் என்பது திண்ணம். அவருடைய ஒரு கனவை நனவாக்கும் முயற்சியாகவே மாறுபட்ட வடிவிலேயே இவ் நினைவு மலரும் வெளி வருகின்றது.

இவ் சிறு வெளியீட்டினை இது வரைகாலம் தமிழ் இனத்தின் அதன் தன்னிகரற்ற தனித்துவ இருப்பிற்கான சத்திய வேள்வியிலேயே சாவையே சரித்திரமாக்கி இம் மண்ணில் விதையாகிப் போன அத்தனை மாவீரர்க ளுக்கும் இதனை சமர்ப்பணம் செய்கின்றோம்.

- குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசான் வரதராஜன்
# தமிழினத்தின் ஆத்ம பலம்



(20.08.2014 அன்றைய வலம்புரி பத்திரிக்கையின் ஆசிரியர் தலையங்கம்)

பொருளியல் ஆசானும் தமிழ்ப் பற்றாளருமாகிய வரதராஜன் அவர்கள் காலமாகி விட்டார் என்ற செய்தி தமிழ் உள்ளங்களை நிச்சயம் நெருடச் செய்யும்.

"பொருளியல்" என்பதை தனது அணிகலனாகக் கொண்ட ஆசான் வரதராஜன் பல்லாயிரக் கணக்கான மாணவர்களை உருவாக்கிய பெருமைக் குரியவர்.

அவரிடம் பொருளியலைக் கற்ற - கற்கின்ற மாணவர்கள் பாக்கியம் செய்தவர்கள் என்று கூறுமளவுக்கு அவரின் கற்பித்தல் திறன் அளப்பரியது.

எல்லா மாணவர்களையும் சமமாக நோக்கும் பெருந்தன்மை பொருந்திய வரதராஜன் அவர்கள் ஒரு பண்பாளராக் நேர்மையாளராக உத்தமராக வாழ்ந்தவர்.

அந்த வாழ்வியல், மாணவர்களுக்கு அவர்மீது அளப்பரிய மரியாதையையும் பக்தியையும் ஏற்படுத்தியிருந்தது.

பொருளியலை ஒரு பாடமாகக் கற்பிப்பதை மட்டும் தனது கடமையாகக் கொள்ளாமல் பொருளியல்துறையில் தான் பெற்ற அறிவியலை - அனுப வத்தை எங்கள் தமிழ் மண்ணுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும் எனக் கடுமையாகப் பாடுபட்டவர்.

காலசூழல்கள் அவருக்கு நல்லதொரு களத்தை அமைத்துக் கொடுக் கவில்லை. எனினும் தமிழ் மக்களின் பொருளாதாரம் பலமடைய வேண்டு மாயின், பொருளியல் சிந்தனைகள் தமிழ் மண்ணில் விதைக்கப்பட வேண்டு மாயின், அதற்கு தமிழினம் சுதந்திரத்தின் அனுபவிப்புக்கு ஆளாக வேண்டும் என்பதை பகிரங்கமாக வெளிப்படுத்தியவர்.

அவரின் இத்தகைய வெளிப்படுத்தல்கள் அவரை சிறை செல்லவும் அங்கு வதைபடவும் வைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும் தனது கொள்கையில் அவர் மிகவும் இறுக்கமாக இருந்தார் என்ற செய்தி தமிழ் மண்ணின் வரலாற்றுப் பக்கத்தில் பதிவுக்குரிய அம்சமாகும்.

பொருளியல் நிபுணத்துவமுடைய ஆசான் வரதராஜன் அவர்கள் நினைத்தி ருந்தால் இலங்கையின் ஆட்சிபீடங்களோடு சேர்ந்து மிக உயர்ந்த இடத்தில் உயர்ந்த அனுபவிப்புக்களோடு வாழ்ந்திருக்க முடியும்.

ஆனால் அவர் தனது இனத்துக்காக, தனது மண்ணிற்காக, தனது மக்களுக் காக வாழ்ந்தார். அதனால் சிறை சென்று மீண்டபோதிலும் தனது கொள்கை யைக் கைவிடாது தொடர்ந்தார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதில் அது தொடர்பில் தமிழ் அரசியலை வழிப்படுத்துவதில் ஆசான் வரதராஜன் கொண்டிருந்த வகிபாகம் அவரின் துணிச்சலைமட்டுமன்றி, தமிழ் மக்களுக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்ததன் சாட்சிப்படுத் தலாகவும் நாம் குறிப்பிட முடியும்.

அவரின் திடீர் மரணம் ஒரு நேர்மையான புத்தி ஜீவியின் இழப்பாக - தமிழ் மக்களை - இனவிடுதலையை - உரிமையை நேசித்த ஓர் உண்மையான ஆத்மபலத்தின் இழப்பாக தமிழ்த்தாய் துயரம் கொள்கிறாள்.

போலித்தனங்கள் மலிந்து உருத்திரதாண்டவம் ஆடுகின்ற இன்றைய எங்கள் சூழ்நிலையில் அடக்கமான - அமைதியான - புகழுரை விரும்பாத - தமிழினத்தை ஆழமாக நேசித்த ஆசான் வரதராஜனின் இழப்பு தமிழினத் தின் துன்பத்தை மேலு மொருபடி உயர்த்திவிட்டது.

ஆம்! பொருளியல்துறையில் எண்ணற்ற மாணவர்களை உருவாக்கிய பெருமையும் தமிழ்த் தேசத்தின் கட்டுமானத்தில் கடுமையாக உழைத்த அர்ப்பணிப்பும் உங்களின் நாமத்தை உச்சாடனம் செய்யும் இவ் வேளையில், உங்கள் ஆத்மாவின் சாந்திக்காக - நீங்கள் ஆத்மார்த்தமாக நேசித்தவை நிஜமாவதற்காக உங்களின் பல்லாயிரக் கணக்கான மாணவர்களும் தமிழ் உறவுகளும் பிரார்த்திக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வி.பி.சிவநாதன்
ஒய்வு நிலைப் பொருளியற் பேராசிரியர்
யாழ்பாணப் பல்கலைக்கழகம்


# சின்னத்துரை வரதராஜன் , வரதராஜன் சகுந்தலா அவர்களின் நினைவுரை

**நாம் எல்லாம் எப்படியும் வாழலாம் என்றில்லை இப்படித்தான் வாழவேண்டும்**

எனது நண்பன் வரதராஜனின் இலட்சிய வாழ்வின் ஆரம்பமே நாம் எல்லாம் எப்படியும் வாழலாம் என்றில்லை இப்படித்தான் வாழவேண்டும் என்று உரைத்து வந்த வேளையில் நாம் நண்பர்களானோம் 1972 ம் வருடம் மே மாதம் 22ம்திகதி பேராதனைப் பல்கலைக் கழகத்தில் சந்தித்து அறிமுகமாகி நண்பர்களானோம்.

இருவரும் கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் பொருளியலை ஒருபாடமாக கற்றதில்லை பல்கலைக்கழகத்தில் பொருளியலை ஒரு பாடமாக கற்பது பெரியதொரு சவாலாக இருந்தபோதும் நானும் வரதனும் மற்றும் சிலமாணவர்களும் முதல் வருடத்தில் கற்கும் மூன்று பாடங்களில் ஒரு பாடமாக பெருளியலைத் தேர்ந்தெடுத்தோம் எமது கடும் முயற்சியி னால் சிறப்புக்கலை செய்வதற்கான பரீட்சைப் புள்ளிகளைப் பெற்று பொருளியலை சிறப்புக்கலைப் பாடமாக செய்வதற்கான தகுதியைப் பெற்றோம். இது எம்மை மேலும் நெருக்கமடையவைத்தது. விரிவுரை மண்டபங்களிலும் அதற்கு வெளியிலும் விடுதியிலும் எங்கள் உரையாடல் பொருளியல் பாடம் சம்பந்தமாகவும் நாட்டு நடப்பு சம்பந்தமாகவும் தமிழர் சம்பந்தமாகவும் தமிழ் இலக்கியம் சம்பந்தமாகவும் இருந்தது.

நாட்டு நடப்பு சம்பந்தமானதில் எங்களை மிகவும் பாதித்தது 1974ம் ஆண்டு நடந்த தமிழ் ஆராய்ச்சி மாநாடும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையும். இது வரதனின் மனதில் ஆழப்பதிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடுக்களாக இருந்தது. இந்நிகழ்வின் பின்னர் தமிழத்தேசியம் பற்றியும் தமிழர்களின் அரசியல் நிலைப்பாடு பற்றியும் அடிக்கடி மற்ற மாணவர்களுடன் விவாதிப்பதுண்டு.

1976ல் பல்கலைக்கழகப் படிப்பை நிறைவு செய்து 1977ல் இருவரும் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்றோம். வரதன் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் விரிவுரையாற்ற தொடங்கினாலும் எங்கள் நட்பும் உரையாடலும் தொடர்ந்தன.

இதற்கிடையில் 1975ம் ஆண்டளவில் எங்களோடு பொருளியல் சிறப்புக் கலை கற்று வந்த சகுந்தலா மீது தனக்கிருந்த ஆழமான காதலை நண்பர் குழாமிற்கு தெரியப்படுத்தினார். சகுந்தலாவை அடைவதற்கு பலர் முயற்சித்தனர் மிக அழகான பெண்ணாக இருந்ததால் கலைப்பீட மாணவர்கள் மாத்திரமல்ல வைத்தியபீட மாணவர்களும் பொறியல் பீட மாணவர்களும் அப்போதிருந்த உதவி விரிவுரையாளர்களில் சிலரும் சகுந்தலாவை அடைய பல முயற்சிகள் எடுத்தனர். விதிவசம் வரதனே தனக்கேற்ற வரன் என சகுந்தலா தீர்மானித்ததால் விரிவுரையாளராகிய சில நாட்களின் பின்னர் இருவரும் திருமணபந்தத்தில் இணைந்துகொண்டனர்

வரதன் பல்கலைக்கழகத்தில் எங்களுடன் கல்விகற்ற காலத்தில் அப்போதிருந்த பிரபல்யமான நாவல் ஆசிரியர்களான மு.வரதராஜன், சாண்டில்யன், அகிலன், மணியன் போன்றவர்களினால் எழுதப்பட்ட நாவல்களை விரும்பிப் படிப்பதோடு நாவல்களில் வரும் இலட்சிய கருத்துக்களடங்கி வாக்கியங்களை தனித்ததொரு குறிப்பு புத்தகத்தில் எழுதிவைத்து நண்பர்கள் படிப்பதற்கு தருவதோடு உரையாடல்களில் மேற்கோகாட்டி பேசிவருவது வரதனின் இயல்பு நாவல் இலக்கியத்தில் இலட்சியக் கதாபாத்திரங்களில் நாட்டங்கொண்டதாலோ என்னவோ தன் துணையவியாரையும் தமிழ்பண்பாட்டின் கோலங்களோடு வாழ வைத்தார் இப்படித்தான் வாழவேண்டும் என இருவரும் தீர்மானித்தால் சகுந்தலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த வேலைவாய்பையும் பெற்றுக்கொள்ளவில்லை. உற்றதுணைவியா கவும் தம் பிள்ளைகளுக்கான நல்ல தாயாகவும் அயலவர்கள் மற்றும் தமிழ் சமூகம் போற்றும் இல்லத்தரசியாகவும் வரதனுடன் வாழ்ந்து வந்தார் இனிதே வாழ்ந்து வரும் காலத்தில் பொருளியலை கற்கும் பல்கலைக்கழக உள்வாரி மாணவர்கட்கும் வெளிவாரி மாணவர்கட்கும் பொருளியலை கற்பிக்கும் சிறந்த ஆசிரியனாக தன்னை வரித்துக் கொண்டார்.

யாழ்ப்பாணத்து மாணவர்களின் கல்விக்காக பேராதனைப் பல்க லைக்கழக விரிவுரையாளர் பதவியை இராஜினாமாச் செய்து யாழ்பா ணத்தில் பொருளியற்கல்லூரி ஒன்றை ஆரம்பித்து தனக்கென ஒரு மாணவர் குழாமை உருவாக்கினார். இதன்பின் போட்டி நிறைந்த தனியர்கல்வி நிறுவனங்களில் புகழ்பூத்த பெருளியல் ஆசானாக யாழ்ப்பா ணத்தில் இருந்ததை யாவரும் அறிவர். தொழில் போட்டியின் விளைவாக வரதன் பல இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியதாயிற்று அந்நேரத்தில் இருந்த அரசியல் சூழலில் சந்தேகத்துக்கிடமானவர் என்று தனியார் கல்விநிறுவன போட்டியாளர்களால் பழிசுமத்தப்பட்டதால் பாதுகாப்புப் படையினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உட்பட்டதால் தான் புற்றுநோய் வந்தது என சகுந்தலா எங்களிடம் எடுத்துரைப்பார். அப்போது வரதன் புன்னகையோடு எமக்கு சொல்வார் **“புதிதாக வரதனுக்கு மாத்திரம் புற்றுநேய் வரவில்லை எல்லோருக்குந்தான் வருகின்றது”** என்று சொல்வார்.

2010 பொதுத் தேர்தலின் போது ஒரு வேட்பாளராக வரதன் தமிழ் தேசிய மக்கள் முன்னணி சார்பில் களமிறங்கவேண்டும் அதற்கு வரதனுடன் ஆலோசனை நடாத்த வேண்டும் அதற்கு ஒழுங்கு செய்து தரும்படி மதிப்பிற்குரிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் என்னை அணு கினார். தமிழ்தேசியத்தில் பற்றுதியோடு வாழும் வரதன் எல்லைக் கிராம குடியேற்றத்திட்டங்கள் பற்றி தன் மேற்படிப்பை ஆரம்பித்த நிலையில் அவரது சுண்டுக்குளி வீட்டில் சந்தித்து உரையாடினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போத வரதனும் வேட்பாளராக களமிறங்க விருப்பம் தெரிவித்ததுடன் 2010 பொதுத்தேர்தலில் அவர் பங்கு கொண்டார் அவரின் அரசியற் பிரவேசத்துடன் அவரது மாணவர்களும் அரசியலில் முனைப்புடன் ஈடுபட் டதை நான்அறிவேன். அவரது அரசியற் பயணம் தொடரும் வேளையில் அவர் நோய்வாய்பட்டதும் அவர் மறைவும் எம் எல்லோருக்கும் வேதனை தரும் சம்பவமாக அமைந்தது.

வரதன் பெருவாரியாக பணம் உழைத்த காலத்தில் ஏழை மாணவர்களுக்கு உதவி செய்தார். வன்னியில் பாதிக்கப்பட்ட குடும்பங் களைச் சேர்ந்த மாணவர்களைத் தேடிச் சென்று கல்வி கற்பதற்கான பணஉதவியை வழங்கியதை எல்லோரும் அறிவர். தனது குடும்பத்திற் கென எதையும் திட்டமிட்டு சேமிக்கவில்லை. சொத்துக்களை சேமிக்க வில்லை. தன் மகன் பார்த்திபனையும் தமிழ் தேசியத்தின் நம்பிக்கைக் குரிய நபராக உருவாக்கிவிட்டதே அவர் தன் குடும்பத்திற்கு தேடி வைத்த சொத்து என சகுந்தலா அடிக்கடி சொல்வது எந்தளவு உண்மையானது என்பதை சகுந்தலாவையும் நாம் இழந்து நின்ற போதே உணர முடிந்தது. ஒட்டு மொத்தத்தில் பார்த்தால் தமிழ் தேசியம் என்ற அழியாச் சொத்தை மாத்திரம் வரதன் தன் குடும்பத்திற்கு சேர்த்து வைத்தப் போய்விட்டார்.


இப்படித்தான் வழவேண்டும் என்ற இலட்சியத்துடன் ஆரம்பித்த வாழ்கைப்பயணம் வரதனையும் சகுந்தலாவையும் சமூகத்தின் நற்பிரஜை களாகவும் உதாரண தம்பதிகளாகவும் எமக்கு தந்திருக்கின்றது. இந்த இலட்சியத்தம்பதிகளின் பெயரும் புகழும் என்றும் நிலைத்திருக்க வேண் டும். இலட்சியத்தம்பதிகள் இருவரது ஆத்மாவும் சாந்தியடையநாம் பிரார்த்திப்போம்

எனது நண்பனின் வாழ்வின் கோலங்களை இங்கு பதிவு செய்வதற்கு எனக்களிக்கப்பட்ட வாய்பிற்கு நன்றி

**வி.பி.சிவநாதன்**
(நண்பன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் வாழ்விடங்களில் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் எமது பாரம்பரிய நிலங்கள் எவ்வாறு பறித்தெடுக்கப்பட்டது என்பது தொடர்பான மேற்கொண்ட ஆய்வில் இருந்து காலத்தில் தேவையறிந்து சில கட்டுரைகள் இங்கே

(இக்கட்டுரைகள் கலிங்கம் இதழுக்காக வரதராஜன் அவர்களால் எழுதப்பட்டது)

எமது இனத்தின் எதிர்கால இருப்பிற்காக
வரலாறு எமக்களித்த பாடத்தை படிப்பினையாகக்
கொண்டு தாயக மண் காப்போம்
எமது இனத்தின் இருப்பை உறுதி செய்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலநறுவை?

**வரலாற்றிலிருந்து நாங்கள் பாடங்கள் படிக்கவில்லை என்றால் வரலாறு எங்களை மன்னிக்காது**

S.வரதராஜன்

இன்று பொலநறுவை என அழைக்கப்படும் பிரதேசம் முன்பு தமன்கடுவ என அழைக்கப்பட்டது. தம்பன்கடவை என்ற தமிழ்ப்பெயர் மருவி தமன்கடுவ என மாறியது. 1901ம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்போது இப்பிரதேசத்தில் மூன்று நிர்வாகப் பிரிவுகள் காணப்பட்டன.

1. எகொடபற்று - தெமளபற்று
2. மேடபற்று
3. சிங்களபற்று

எகொட பற்றுப் பிரதேசத்தில் தமிழர்களும் மேடபற்றுப் பிரதேசத்தில் முஸ்லீம்களும் சிங்க பற்றுப் பிரதேசத்தில் சிங்களவர்களும் பெரும்பான்மை யாக வாழ்ந்து வந்தனர்.

### எகொடபற்று – தெமளபற்று

1901ம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்போது எகொட பற்றுப் பிரதேசத்தில் வாழ்ந்து 1990 பேரில் 1069 பேர் தமிழர்களாகும். அதாவது இப் பிரதேசத்தில் 54 சதவீதத்தினர் தமிழர்களாயும் 25 சதவீதத்தினர் முஸ்லீம்களாயும் 3 சதவீதத்தி னர் சிங்களவர்களாயும் இருந்தனர். ஏனையோர் குறிப்பாக வேடுவ சமூகத்தினர் 18 சதவீதமாக இருந்தனர்.

எகொடபற்றுப் பிரதேசத்தில் காணப்பட்ட 26 கிராமங்களில் 16 கிராமங்க ளில் தமிழர்களும் 8 கிராமங்களில் முஸ்லீம்களும் 2 கிராமங்களில் சிங்களவர் களும் வாழ்ந்தனர்.

### மேடபற்று

1901ம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்போது மேடபற்றுப் பிரதேசத்தில் வாழ்ந்தவர்களில் 80 சதவீதத்தினர் முஸ்லீம்களாயும் 5 சதவீதத்தினர் தமிழர் களாயும் இருந்தனர். 14 சதவீதத்தினர் சிங்களவர்களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சிங்கள பற்று பெயருக்கேற்றபடி சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்தது.

இதன்படி 1901ம் ஆண்டு பொலநறுவை மாவட்டத்தில் ஒரு நிர்வாகப் பிரிவில் தமிழர் பெரும்பான்மையாகவும் மற்றுமொரு நிர்வாகப் பிரிவில் முஸ்லீம்களும் மற்றுமொரு நிர்வாகப் பிரிவில் சிங்களவர்களும் பெரும்பான்மையாக வாழ்ந் தனர்.

1971ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் போது எகொட பற்றும் மேட பற்றும் இணைந்த ஒரு நிர்வாகப் பிரிவும் சிங்களப் பற்று என்பது மற்றொரு நிர்வாகப் பிரிவாகவும் காணப்பட்டது.

1901ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்போது எகொட பற்றும் மேட பற்றும் இணைந்த நிர்வாகப் பிரிவின் மொத்த சனத்தொகையில் தமிழர்களின் பங்கு 28 சதவீதமாகவும் முஸ்லீம்களின் பங்கு 55 சதவீதமாகவும் காணப்பட்டது. இப்பிரதேசத்தில் வாழ்ந்த சிங்களவர்களின் பங்கு 9 சதவீதமாக மட்டுமே இருந்தது.

1971ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்போது எகொட பற்றும் மேட பற்றும் இணைந்த நிர்வாகப் பிரிவின் மொத்த சனத்தொகையில் தமிழர்களின் பங்கு 8 சதவீதமாகவும் முஸ்லீம்களின் பங்கு 16 சதவீதமாகவும் மட்டுமே காணப்பட்டது. அதே நேரத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்த சிங்களவர்களின் பங்கு 76 சதவீதமாக இருந்தது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1901 - 1971 காலப்பகுதியில் தமிழர்களின் பங்கு 28 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைவடைய சிங்களவர்களின் பங்கு 9 சதவீதத்திலிருந்து 76 சதவீதமாக அதிகரித்திருந்தது.

1940களில் வரண்ட பிரதேசக் குடியேற்றத் திட்டங்கள் என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்களின் விளைவே இதுவாகும்.

1940 களில் அரசாங்கம் இப்பிரதேசத்திலுள்ள பாராக்கிர சமுத்திரம், மின்னேரியாக்குளம், கிரியத்தல குளம், என்பவற்றை மையமாகக் கொண்டு பலகுடியேற்றத் திட்டங்களை மேற்கொண்டது. ஏனைய மாவட்டங்களிலிருந்து பெருமளவு சிங்கள மக்கள் இப்பிரதேசத்திற்குக் கொண்டு வரப்பட்டு குடியமர்த் தப்பட்டனர்.

1931ம் ஆண்டு 7907 பேராக இருந்த இப்பிரதேசத்தின் மொத்த சனத்தொகை 1946ம் ஆண்டு 20,809 பேராக அதிகரித்தது. இதன்படி 1931-1946 காலப்பகுதியில் இப்பிரதேசத்தின் சனத்தொகை 163.2 சதவீதத்தினால் அதிகரித்திருந் தது. இலங்கையின் வேறு எந்தவொரு பிரதேசத்திலும் இவ்வாறான ஒரு உயர்ந்த அதிகரிப்பு ஏற்படவில்லை என 1946ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

**இக்குடியேற்றத் திட்டங்களின் விளைவாக இப்பிரதேசத்திலிருந்து தமிழர்கள் முற்றாக அகற்றப்பட்டனர்.**

இறுதியாக எடுக்கப்பட்ட 2012ம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி பொலநறுவை மாவட்டத்தில் வாழும் மொத்த தமிழர்களின் தொகையே 8548 பேர் மட்டுமே. இது மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 2 சதவீதம் மட்டுமே.

1901 ஆம் ஆண்டு பொலனறுவை மாவட்டத்தின் ஒரு நிர்வாகப் பிரிவு தமிழர்களுக்கே உரியதாக இருந்தது அம் மாவட்டத்தில் தமிழர்கள் காணமல் போய்விட்டனர்.

**1901ம் ஆண்டு பொலநறுவை மாவட்டத்தில் பரீட்சித்துப் பார்க்கப்பட்ட இத்திட்டம் பூரண வெற்றியடைந்ததைத் தொடர்ந்து 1950 களில் கிழக்கு மாகாணத்தில் கல்லோயா, அல்லை, கந்தளாய் குடியேற்றத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி அங்கிருந்தும் தமிழர்களை அகற்றியது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் 2012ம் ஆண்டு குடிசன மதிப்பீடு

## -ஓர் அலசல்

S.வரதராஜன்
(ஈழத்தின் பிரபல பொருளியல் பேராசான்.
முன்னாள் விரிவுரையாளர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்)

இலங்கையின் முதலாவது உத்தியோகபூர்வமான குடிசன மதிப்பீடு 1871ம் ஆண்டு மார்ச் மாதம் 27ம் திகதி மேற்கொள்ளப்பட்டது. இறுதியாக 2012ம் ஆண்டு குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. இது இலங்கையின் 14வது குடிசன மதிப்பீடாகும். ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படுவது வழமை. அதுவும் 1ல் முடிகின்ற ஆண்டில் குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படுவது வழமை. 1871ம் ஆண்டு முதல் 1931 ஆண்டு வரை ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை குடிசன மதிப்பீடு மேற் கொள்ளப்பட்டது. அடுத்து 1941ம் ஆண்டு குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. இரண்டாம் உலக மகா யுத்தம் (1939-1945) காரணமாக இக்குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட வில்லை.

1931ம் ஆண்டுக்குப் பின்னர் 15 ஆண்டுகள் கழித்து 1946ம் ஆண்டு மார்ச் 19ம் திகதி எட்டாவது குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. இதன் பின்னர் 10 ஆண்டுகள் என்ற ஒழுங்குமுறை மாற்றமடைந்தது. 9வது குடிசன மதிப்பீடு 1953ம் ஆண்டும் 10வது குடிசன மதிப்பீடு 1963 ஆண்டும் மேற்கொள்ளப்பட்டது. இலங்கையில் குடிசன மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவுபெற்றதை நினைவுகூரும் முகமாக 1971ம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்டோபர் மாதம் 9ம் திகதி 11வது குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப் பட்டது. இதன் பின்னர் 1ல் முடிகின்ற 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படுவது என்ற வழமைக்கு ஏற்ப 12வது குடிசன மதிப்பீடு 1981ம் ஆண்டு மார்ச் 17ம் திகதி நடைபெற்றது. இதன் பின்னர் 1991ம் ஆண்டு குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால் உள்நாட்டுப்போர் காரணமாக இக்குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. 2001 யூலை 17 ஆம் திகதி 13 வது குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இது ஒரு பூரணமான குடிசன மதிப்பீடு அல்ல. 18 மாவட்டங்களில் மட்டுமே பூரணமான குடிசன மதிப்பீடு மதிப்பிடப்பட்டது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் பெரும்பா லான பிரதேசங்கள் இக்குடிசன மதிப்பீட்டில் உள்ளடக்கப்படவில்லை.

இதன் பின்னர் 2011ம் ஆண்டு இலங்கையின் 14வது குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வழமைபோல் அரசாங்கத்தின் குளறுபடியான வேலைகளினால் (தகவற் படிவங்கள் அச்சிடுவதில் காணப்பட்ட தவறுகள் மற்றும் காலதாமதங் களினால்) இக்குடிசன மதிப்பீட்டு நடவடிக்கைகள் பிற்போடப்பட்டு 2012ம் மார்ச் 19ம் திகதி மேற்கொள்ளப்பட்டது. இதன்படி 30 ஆண்டுகளின் பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடிசன மதிப்பீடு மேற்கொள் ளப்பட்டது

கடந்த நூற்றாண்டின் (20ம் நூற்றாண்டு) முதலாவது குடிசன மதிப்பீடு 1901ம் ஆண்டு மார்ச் மாதம் 1ம் திகதி மேற்கொள்ளப்பட்டது. இந்த நூற்றாண்டின் (21ம் நூற்றாண்டு) முழுமையான முதலாவது குடிசன மதிப்பீடு 2012ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. கடந்த 110 ஆண்டுகளில் தமிழர் தாயகத்தின் சனத்தொகை அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஒரு காலத்தில் தென் தமிழீழம் என்று அழைக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தின் சனத்தொகையின் போக்கு, இம்மாகாணத்தின் சனத்தொகையில் ஏற்பட்ட அமைப்பு ரீதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்கள் என்பவற்றை முதலில் நோக்குவோம்.


1961ம் ஆண்டு வரை கிழக்கு மாகாணம் என்பது மட்டக்களப்பு, திருகோணமலை என்ற இரண்டு மாவட்டங்கைக் கொண்டிருந்தது. 1960ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியில் உள்ள 4318 சதுரகிலோமீற்றர் நிலப்பரப்பு தனியொரு நிர்வாகப் பிரதேசமாக அம்பாறை மாவட்டம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தின் 60 சதவீத நிலப்பரப்பு அம்பாறை மாவட்டமாக மாற்றப்பட்டது. எனவே தற்போது கிழக்கு மாகாணம் என்பது திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை என மூன்று நிர்வாக மாவட்டங்களைக் கொண்டுள்ளது.

1901ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தின் சனத்தொகையின் இனரீதியான அமைப்பினைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.


| இனம் | ஆண்டு | தொகை | வீதம் |
|---|---|---|---|
| *தமிழர்* | 1901 | 96,926 | 55.9% |
| | 2001 | 617,295 | 39.7% |
| *முஸ்லீம்* | 1901 | 62,448 | 35.9% |
| | 2001 | 569,182 | 36.7% |
| *சிங்களவர்* | 1901 | 8,778 | 35.9% |
| | 2001 | 359,136 | 36.7% |
| *ஏனையோர்* | 1901 | 5,450 | 3.1% |
| | 2001 | 5,768 | 0.4% |
| *கிழக்கு மாகாணம்* | 1901 | 173,602 | 35.9% |
| | 2001 | 1,551,381 | 36.7% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2012





**"1901-2012 காலப்பகுதியில்**
**கிழக்கு மாகாணத்தில்**
**தமிழ் மக்களின் தொகை**
**537 சதவீத்தினால் மட்டுமே அதிகரிக்க**
**சிங்கள மக்களின் தொகை 3991 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது"**

1901 - 2012 காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் தொகை 96,926 பேரிலிருந்து 617,225 பேராக அதிகரிக்க, சிங்களமக்களின் தொகை 8,778 பேரிலிருந்து 359,136 பேராக அதிகரித்தி ருந்தது. இதன்படி 1901-2012 காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் தொகை 5,37 சதவீத்தினால் மட்டுமே அதிகரிக்க சிங்கள மக்களின் தொகை 3,991 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இதன் விளைவாக 1901ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தின் மொத்த சனத்தொகையில் 55.8 சதவீதமாக இருந்த தமிழ்மக்களின் பங்கு 2012ம் ஆண்டு 39.7 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. அதே நேரத்தில் சிங்களமக்களின் பங்கு 5.1 சதவீதத்திலிருந்து 23.2 சதவீதமாக அதிகரித்தது.





# திருகோணமலை
## மாவட்டம்


**இம்மாவட்டத்தின் பெரும்பான்மையினமாக முஸ்லீம் மக்கள் மாறியுள்ளனர். தமிழ் மக்கள் இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். மிகவிரைவில் தமிழ்மக்கள் மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்படும் அபாயம் காணப்படுகின்றது**

| இனம் | ஆண்டு | தொகை | வீதம் |
|---|---|---|---|
| *தமிழர்* | 1901 | 17,069 | 60.0% |
| | 2012 | 122,080 | 32.3% |
| *முஸ்லீம்* | 1901 | 8,258 | 29.0% |
| | 2012 | 152,845 | 40.0% |
| *சிங்களவர்* | 1901 | 1,203 | 4.2% |
| | 2012 | 101,991 | 27.0% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1901-2012 காலப்பகுதியில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்மக்களின் தொகை 17,069 பேரிலிருந்து 122,080 பேராக அதிகரிக்க, சிங்கள மக்களின் தொகை 1,203 பேரிலிருந்து 101,991 பேராக அதிகரித் திருந்தது. இதன்படி 1901-2012 காலப்பகுதியில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்மக்களின் தொகை 615 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்திருக்க, சிங்கள மக்களின் தொகை 8,878 சதவீத்தினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்திருந்தது. இதன் விளைவாக 1901ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தின் மொத்த சனத்தொகையில் 60 சதவீதமாக இருந்த தமிழ் மக்களின் பங்கு 2012ம் ஆண்டு 32.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. அதே நேரத்தில் சிங்களமக்களின் பங்கு 4.2 சதவீதத்திலிரந்து 27 சதவீதமாக அதிகரித்தது. அதேநேரத்தில் 1901ம் ஆண்டு 29சதவீதமாக இருந்த முஸ்லீம் மக்களின் பங்கு 2012ம் ஆண்டு 40.4 சதவீதமாக அதிகரித்திருந்தது. இதன் மூலம் இம்மாவட்டத்தின் பெரும்பான்மையினமாக முஸ்லீம் மக்கள் மாறியுள்ளனர். தமிழ் மக்கள் இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மிகவிரைவில் தமிழ்மக்கள் மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்படும் அபாயம் காணப்படுகின்றது. 2012ம் குடிசன மதிப்பீட்டின்படி சிங்கள மக்களைவிட தமிழ் மக்களின் தொகை வெறுமனே 20,089 பேரால் மட்டுமே கூடுதலாக உள்ளனர். இந்த இடைவெளி மிகவிரைவில் அரசாங்கத்தினால் நிரப்பப்பட்டுவிடும். எனவே தமிழர் தாயகத்தின் தலைநகரில் தமிழ் மக்கள் மிக விரைவில் மூன்றாம்தரப் பிரஜைகளாக மாற்றப்பட்டுவிடுவர்.

1901ம் ஆண்டு நான்கு பிரிவுகள் காணப்பட்டன. அவற்றில் மூன்று பிரிவுகளின் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்தனர். தம்பலகாமம் பற்றுப் பிரிவில் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்தனர். இப்பிரதேசத்தின் மொத்த சனத்தொகையில் 34 சதவீதத்தினர் தமிழர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இக்காலப்பகுதியில் இம்மாவட்டத்தில் வாழ்ந்த 1,203 சிங்கள மக்களும் மாவட்டத்தில் ஆங்காங்கு சிதறுபட்டு வாழ்ந்தனர். மாவட்டத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக இருக்கவில்லை.

2012ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்போது இம்மாவட்டத்தில் 11 பிரதேச பிரிவுகள் காணப்பட்டன. இவற்றுள் 5 பிரதேச பிரிவுகளில் சிங்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். நான்கு பிரதேச பிரிவுகளில் முஸ்லீம் மக்கள் பெருபான்மையாக வாழ்கின்றனர். இரண்டு பிரதேச பிரிவுகளில் மட்டுமே தமிழ் மக்கள் பெரும்பான்னையாக வாழ்கின்றனர். திருகோணமலை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் ஏறத்தாள 60 சத வீதமான பிரதேசத்தில் சிங்கள மக்கள் வாழ்கின்றனர். ஏறத்தாள 30 சத வீதமான நிலப்பரப்பில் முஸ்லீம் மக்கள் வாழ்கின்றனர். தமிழ் மக்கள் இம்மாவட்டத்தில் 10 சதவீதமான நிலப்பரப்பில் மட்டுமே வாழ்கின்றனர்.





| இனம் | ஆண்டு | தொகை | வீதம் |
|---|---|---|---|
| தமிழர் | 1901 | 23,494 | 37.4% |
| | 2012 | 112,915 | 17.4% |
| முஸ்லீம் | 1901 | 32,688 | 26.1% |
| | 2012 | 251,018 | 43.6% |
| சிங்களவர் | 1901 | 6,172 | 9.8% |
| | 2012 | 251,018 | 38.7% |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1901**




**2012**




இன்று அம்பாறை மாவட்டம் என்ற பிரதேசத்தில் 1901ம் குடிசன மதிப்பீட்டின்போது மொத்த சனத்தொகையில் தமிழ் மக்களின் பங்கு 37.4 சதவீதமாகவும் முஸ்லீம் மக்களின் பங்கு 52 சதவீதமாகவும் சிங்கள மக்களின் பங்கு 9.8 சதவீதமாகவும் காணப்பட்டது.

1901-2012 காலப்பகுதியில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ்மக்களின் தொகை 23,494 பேரிலிருந்து 112,915 பேராக அதிகரிக்க, சிங்கள மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தொகை 6172 பேரிலிருந்து 251018 அதிகரித்திருந்தது. இதன்படி 1901-2012 காலப்பகுதியில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ்மக்களின் தொகை 381 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்திருக்க சிங்களமக்களின் தொகை 3,967 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

இதன் விளைவாக 1901ம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 37.4 சதவீதமாக இருந்த தமிழ்மக்களின் பங்கு 2012ம் ஆண்டு 17.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. அதேநேரத்தில் சிங்களமக்களின் பங்கு 9.8 சதவீதத்திலிருந்து 38.7 சதவீதமாக அதிகரித்தது. அதேநேரத்தில் 1901ம் ஆண்டு 52 சதவீதமாக இருந்த முஸ்லீம் மக்களின் பங்கு 2012ம் ஆண்டு 43.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

2012ம் குடிசன மதிப்பீட்டின்படி சிங்கள மக்களைவிட முஸ்லீம் மக்களின் தொகை வெறுமனே 31,466 பேரால் மட்டுமே கூடுதலாக உள்ளனர். இந்த இடைவெளி மிகவிரைவில் அரசாங்கத்தினால் நிரப்பப்பட்டுவிடும். எனவே அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம் மக்கள் மிகவிரைவில் இரண்டாம் தரப்பிரஜைகளாக மாற்றப்பட்டுவிடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மட்டக்களப்பு மாவட்டம்


தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக பரிணமித்ததன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தை சிங்களமயப்படுத்தும் திட்டத்தை அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விட்டது. இதன் காரணமாகவே மட்டக்களப்பு மாவட்டம் இன்றுவரை தமிழர் மாவட்டமாக இருந்து வருகின்றது. ஆனால் எதிர்காலத்தில்...?

| இனம் | ஆண்டு | தொகை | வீதம் |
|---|---|---|---|
| தமிழர் | 1901 | 56,363 | 68.4% |
| | 2012 | 382,300 | 72.8% |
| முஸ்லீம் | 1901 | 21,502 | 26.1% |
| | 2012 | 133,844 | 25.5% |
| சிங்களவர் | 1901 | 1,403 | 1.7% |
| | 2012 | 6,167 | 1.2% |

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே 1901-2012 காலப்பகுதியில் சனத்தொகையின் இனரீதியான அமைப்பில் பாரிய மாற்றங்கள் ஏற்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1901-2012 காலப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் தமிழ் மக்களின் பங்கு 68.4 சதவீதத்திலிருந்து 72.8 சத வீதமாக அதிகரித்திருந்தது. முஸ்லீம் மக்களின் பங்கு 26.1 சதவீதத்தி லிருந்து 25.5 சதவீதமாக சற்று குறைவடைந்துள்ளது. சிங்கள மக்களின் பங்கு 1.7 சதவீதத்திலிருந்து 1.2 சதவீதமாக சற்று குறைவடைந்துள்ளது.

இன்று கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே தமிழ் மக்கள் பெரும்பான்மையாக உள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களின் தொகை காரணமாகவே இன்று கிழக்கு மாகாணத்தின் மொத்த சனத்தொகையில் தமிழர்களின் பங்கு ஏனைய இனங்களிலும் பார்க்க உயர்வாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. அரசாங் கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாரிய சிங்கள குடியேற்றத்திட்டங்களை இன்றுவரை மேற்கொள்ளாமையே இதற்கு காரணமாகும். 1940 களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிப்பகுதியில் கிழக்கு மாகாணத்தை சிங்கள மயப்படுத்த வேண்டும் என்ற கொள்கையை அரசாங்கம் வகுத்தது. இதற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியையும் (இன்றைய அம்பாறை மாவட்டம்) திருகோணமலை மாவட்டத்தையும் சிங்கள மயப்படுத்தும் திட்டத்தை 1940களிலும் 1950 களிலும் அரசாங்கம் ஆரம்பித்தது. மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியில் கல்லோயா குடியேற்றத் திட்டத்தையும் திருகோணமலை மாவட்டத்தில் அல்லை, கந்தளாய் குடியேற்றத்திட்டங்களையும் சமகாலத்தில் ஆரம்பித்து வைத்தது. 1959ம் ஆண்டு அம்பாறை என்ற சிங்கள தேர்தல் தொகுதியை உருவாக்கியதன் மூலமும் அதனையடுத்து 1961ம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தின் உருவாக்கத்தின் மூலமும் மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியை சிங்களமயப்படுத்துதல் என்ற அரசாங்கத்தின் நோக்கம் நிறைவேறியது. 1976 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 57சதவீதமான நிலப்பரப்பை உள்ளடக்கி சேருவல என்ற சிங்கள தேர்தற்தொகுதியை உருவாக்கியதன் மூலம் இம்மாவட்டத்தை சிங்களமயப்படுத்துதல் என்ற அரசாங்கத்தின் நோக்கம் நிறைவேறியது.

இவற்றையடுத்து அரசாங்கத்தின் கவனம் மட்டக்களப்பு மாவட்டத்தின் பக்கம் திரும்பியது. 1970களின் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் B வலயம் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பிரதேசங்களை உள்ளடக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இத்திட்டத்தை மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்த முடியாமல் போனமை தமிழ் மக்களின் அதிஸ்டமாகும். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக பரிணமித்ததன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தை சிங்களமயப்படுத்தும் திட்டத்தை அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விட்டது. இதன் காரணமாகவே மட்டக்களப்பு மாவட்டம் இன்றுவரை தமிழர் மாவட்டமாக இருந்து வருகின்றது.

ஆனால் எதிர்காலத்தில்..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் வாழ்விடங்களில் சிங்களக் குடியேற்றங்கள் ஒரே பார்வையில்..

## பொலனறுவை மாவட்டம்

1901 பொலனறுவையின் எகொட பற்றும் மேட பற்றும் இணைந்த நிர்வாகப் பிரிவின் மொத்த சனத்தொகையில் 28 சதவீதமாக இருந்த தமிழர் 1971 ஆம் ஆண்டு 8 சதவீதமாக குறைந்தனர் மாறாக சிங்களவர் 9 சதவீதமாக இருந்து 76 சதசீதமாக உயர்ந்தனர்

இறுதியாக எடுக்கப்பட்ட 2012ம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி பொலநறுவை மாவட்டத்தில் மாத்த சனத்தொகையில் 2 சதவீதம் மட்டுமே தமிழர்

1901 ஆம் ஆண்டு பொலனறுவை மாவட்டத்தின் ஒரு நிர்வாகப் பிரிவு தமிழர்களுக்கே உரியதாக இருந்தது அம் மாவட்டத்தில் தமிழர்கள் காணமல் போய்விட்டனர்.

## திருகோணமலை மாவட்டம்

**மொத்த சனத்தொகையில்....**

| | | |
|---|---|---|
| தமிழர் – | 1901 ஆம் ஆண்டு | 60 சதவீதமாக இருந்தவர்கள் |
| | 2012 ஆம் ஆண்டு | 32.8 சதவீதமாக **குறைந்தனர்** ↓ |
| சிங்களவர் – | 1901 ஆம் ஆண்டு | 4.2 சதவீதமாக இருந்தவர்கள் |
| | 2012 ஆம் ஆண்டு | 27 சதவீதமாக **அதிகரித்தனர்** ↑ |
| முஸ்லீம்கள் – | 1901 ஆம் ஆண்டு | 29 சதவீதமாக இருந்தவர்கள் |
| | 2012 ஆம் ஆண்டு | 40.1சதவீதமாக **அதிகரித்தனர்** ↑ |

1901-2012 காலப்பகுதியில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்மக்க ளின் தொகை 615 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்திருக்க, சிங்கள மக்களின் தொகை 8,878 சதவீத்தினால்

**விளைவு:** *1. இம் மாவட்டத்தின் பெரும்பான்மையினராக முஸ்லீம் மக்கள் மாறியுள்ளனர்*

*2. தமிழ் மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர்*

**எதிர்காலத்தில் :**

2012ம் குடிசன மதிப்பீட்டின்படி சிங்கள மக்களைவிட தமிழ் மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகை வெறுமனே 20,089 பேரால் மட்டுமே கூடுதலாக உள்ளனர். இந்த இடைவெளி மிகவிரைவில் அரசாங்கத்தினால் நிரப்பப்பட்டுவிடும். எனவே தமிழர் தாயகத்தின் தலைநகரில் தமிழ் மக்கள் மிக விரைவில் மூன்றாம் தரப் பிரஜைகளாக மாற்றப்பட் டுவிடுவர்.

## அம்பாறை மாவட்டம்

**மொத்த சனத்தொகையில்....**

| | | |
|---|---|---|
| தமிழர் – | 1901 ஆம் ஆண்டு | 37.4 சதவீதமாக இருந்தவர்கள் |
| | 2012 ஆம் ஆண்டு | 17.4 சதவீதமாக **குறைந்தனர்** ↓ |
| சிங்களவர் – | 1901 ஆம் ஆண்டு | 9.8 சதவீதமாக இருந்தவர்கள் |
| | 2012 ஆம் ஆண்டு | 38.7சதவீதமாக **அதிகரித்தனர்** ↑ |
| முஸ்லீம்கள் – | 1901 ஆம் ஆண்டு | 52 சதவீதமாக இருந்தவர்கள் |
| | 2012 ஆம் ஆண்டு | 43.6சதவீதமாக **குறைந்தனர்** ↓ |

1901-2012 காலப்பகுதியில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ்மக்களின் தொகை 381 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்திருக்க சிங்களமக்களின் தொகை 3,967 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

**விளைவு:** *1. இம் மாவட்டத்தில் சிங்களவர் இரண்டாம் தர பிரஜைகளாக மாறியுள்ளனர்*
*2. தமிழ் மக்கள் மூன்றாம் தரப் பிரஜைகள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர்*

**எதிர்காலத்தில் :**

2012ம் குடிசன மதிப்பீட்டின்படி சிங்கள மக்களைவிட முஸ்லீம் மக்களின் தொகை வெறுமனே 31,466 பேரால் மட்டுமே கூடுதலாக உள்ளனர். இந்த இடைவெளி மிகவிரைவில் அரசாங்கத்தினால் நிரப்பப்பட்டுவிடும். எனவே அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம் மக்கள் மிகவிரைவில் இரண்டாம் தரப்பிரஜைகளாக மாற்றப்பட்டுவிடுவர்.

**எதிர்காலத்திலும் இவ்வாறான மாவட்ட இழப்புக்கள் தொடரத்தான் போகின்றது**

**விழித்திரு தமிழா ! உன் இனத்தின் எதிர்கால இருப்பை உறுதிசெய்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களை
தமிழ் மக்கள் இழந்து விட்டனர். எதிர்காலத்தில் இவ்வாறான
பிரதேசங்களின் இழப்பு வடக்கிலும் தொடரத்தான் போகின்றது.

இழந்ததை மீளப் பெறப் போராடப் போகின்றோமா? அல்லது இருப்பதைப்
பாதுகாக்கப் போராடப் போகின்றோமா? அல்லது எல்லாவற் றையும் இழக்
கப் போகின்றோமா? இந்த வினாக்கள் தமிழ் மக்களை நோக்கியல்ல.
தமிழ் அரசியல் தலைவர்களை நோக்கியதே.

அன்று பொலனறுவையில் நடந்த போது எங்கள் தமிழ்த் தலைமைகள்
மௌனம், நேற்று கிழக்கு மாகாணத்தில்
நடந்த போதும் மௌனம் இன்று வடமாகாணத்தில்
நடக்கின்றது இப்போதும் மௌனமா?

"நெஞ்சினில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி வஞ்சனை செய்வாரடி
கிளியே. வாய்ச் சொல்லில் வீரரடி" என்ற பாரதியாரின்
கூற்றுக்கு இலக்கணமாக எமது அரசியல் தலைவர்கள் செயற்படுவார்
களாயின் நாம் இழந்த தாயகத்தின் வரலாற்றை எழுதுவதற்கு கூட வருங்
காலத்தில் இந்த மண்ணில் யாரும் இருக்கமாட்டார்கள்."

**- சின்னத்துரை வரதராஜன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org